[1986 மே 6

முதியோர் உதவித்தொகை வழங்கல்

685—(* வினா எண் 8196) **திரு. சு. பாலன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 5 மாதகாலமாக சென்னையில் முதியோர் உதவித்தொகை வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) 1985 நவம்பர் மாதம் சென்னை நகரில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்னை நகரில் உள்ள அனைத்து வட்டாட்சியர்களும் வெள்ள நிவாரணப்பணியில் மும்முரமாக ஈடுபட்டதால் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள முதியோர் உதவித் தொகை சம்பந்தமான அனைத்து மணியார்டர்களும், குறித்த காலத்தில் அனுப்ப இயலவில்லை. வெள்ள நிவாரணப் பணிகள் டிசம்பர் 1985 உடன் முடிவடைந்ததால் சனவரி 1986-ல் பணம் அனுப்பப்பட்டது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வட்டாட்சியர்கள் வெள்ள நிவாரணப் பணியில் ஈடுபட்டதன் காரணமாக கொடுக்கப்பட வேண்டிய இப்படிப்பட்ட பணம் நிறுத்தப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தை அடுத்து இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இனிமேலாவது உடனடியாக அவர்களுக்கு அந்தத் தொகையை மாதாமாதம் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதியோர் உதவித்தொகை வட்டாட்சியர் மூலமாக மாதாமாதம்தான் முதியோர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் சில சமயங்களில் இயற்கைச் சூழ்நிலை

1986 மே 6]

யினால் மக்களுக்கு வேறு விதமான பணிகளில் வட்டாட்சியர்கள் ஈடுபடுகின்றபொழுது அப்படிப்பட்ட முதியோர் உதவித் தொகை கொடுக்கின்ற பணி தடைப்படுகின்ற நிலைகூட இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இயற்கையினால் பாதிக் கப்படாத நிலைமை ஏற்பட்டால் செப்டம்பர் மாதத்திலிருந்து நிச்சயமாக மாதாமாதம் கொடுக்கின்ற நிலைகூட ஏற்படலாம்.

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்திலே முதியோர் உதவித் தொகை கோரும் விண்ணப்பங்கள் தேங்கியிருப்பதை அரசு அறியுமா? அப்படியென்றால் எவ்வளவு விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக் கின்றன? அவைகளுக்கு எப்பொழுது உதவித் தொகை கொடுத்து முடிக்கப்படும் என்று உறுதி கூறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் எவ்வளவு விண்ணப் பங்கள் தேங்கி இருக்கின்றன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தற்சமயம் சென்னை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் மொத்தம் 11,230 பேர் பயன் அடைந்து வருகின்றனர்.

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்சமயம் ஒரு மாவட்டத்திற்கு 1,500 என்ற குறியீட்டை வைத்துதான் முதியோர்களுக்கு உதவித் தொகை அளித்து வருவதாக அறிகிறேன். இந்தக் குறியீட்டை அதிகப்படுத்தி, ஆதாவற்றிருக்கும் ஏராளமான முதியோர்களுக்கு மேலும் உதவித் தொகை வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி, சென்னை மாவட் டத்தில் உள்ள முதியோர் உதவித் தொகை பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற மற்றைய மாவட்டங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதுவும் 1,500 என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்

கிறது என்ற விவரத்தையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இதற்குத் தனிக் கேள்வி போட்டால், பதில் அளிக்கப்படும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே பேசும்பொழுது நான் தகுதி படைத்த அனைவருக்கும் முதியோர் தொகை வழங்கப்பட வேண்டும், இருப்பவர்கள் இறந்தால்தான் அடுத்தவருக்கு என்ற நிலையிருக்கிறது என்று குறிப்பிட்டேன். அப்பொழுது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, அவ்வாறு கிடையாது, தகுதி படைத்த அனைவருக்கும் வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். ஆனால், என்னுடைய தொகுதியிலிருக்கிற 226 பேர்கள், ஓராண்டுக் காலத்திற்கு மேல் ஓய்வூதியத் தொகைக்காகக் காத்திருக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் நிலைமைகளைப் புரிந்து கொண்டு, தகுதிபடைத்த நபர்கள் எத்தனை பேர்கள் இருந்தாலும், அத்தனை பேர்களுக்கும் இந்த முதியோர் உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி படைத்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் முதியோர் உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நிலுவையில் இருக்கின்ற 26,268 பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகை அளிக்கப்படும் என்று நான் மானியக் கோரிக்கையின்மீது பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]